**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, ஜெயங்கொண்டம்.**

**முன்னிலை :** **திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,**
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஜெயங்கொண்டம்.

2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் நாள் புதன்கிழமை

Crl.M.P.No.4215/2023

கிருத்திகா,
த/பெ.இராஜோக்கியம்,
நடுத்தெரு, சுத்தமல்லி கிராமம்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.
தற்போது, அழகிரிபாளையம்,
கீழமாத்தூர் அஞ்சல்,
ஆலத்தூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். ....மனுதாரர்

/ எதிர் /

ராஜோக்கியம்,
த/பெ.தர்மலிங்கம்,
6 வது கிராஸ், பெரியார் நகர்,
அரியலூர் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ....எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 30.08.2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜோதிமணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பும் கேட்கப்பட்டும், சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்.

**உத்தரவு**

இம்மனுவானது ஜீவனாம்சம் வேண்டி மனுதாரரால் கு.வி.மு.ச பிரிவு 128 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

**1.** இம்மனுதாரர் அசல் மனுவில் மைனர் மனுதாரர். மனுதாரர் மைனராக இருந்தபோது அவரது தாயார் மனுதாரருக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் வேண்டி மனு தாக்கல் செய்து M.C.01/2009 எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இருதரப்பு விசாரணை முடிந்து கடந்த 18.04.2011 ம் தேதியில் எதிர் மனுதாரர்

மனுதாரருக்கு மாதாமாதம் ஜீவனாம்சமாக ரூ.1000/- ஒவ்வொரு ஆங்கில மாதம் 07ம் தேதிக்குள் மனுதாரர் திருமண காலம் வரை வழங்கவேண்டும் என்றும், மேலும் மனுதாரரது திருமண செலவுகளையும் ஏற்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், எதிர் மனுதாரர் சமூகம் நீதிமன்ற உத்தரவுப்படி ஜீவனாம்ச தொகையை ஒவ்வொரு மாதமும் எதிர் மனுதாரர் மனுதாரரின் வங்கி கணக்கில் செலுத்தி வருகிறார் என்றும், எதிர் மனுதாரர் அரியலூரில் உள்ள அரசு சிமெண்ட் கம்பெனியில் சூப்பர் வைசராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும், ஓய்வூதியமாக மாதாமாதம் ரூ.50,000/-க்கும் பெறுகிறார் என்றும், எதிர் மனுதாரர் அவருக்கு சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் வேண்டும் பயிர் செய்து வருடம் ரூ.20 இலட்சமும், அரியலூரில் உள்ள வீட்டை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.20 ஆயிரமும் கையிருப்பாக ரூ.25 லட்சம் வைத்துக்கொண்டு வட்டிக்கு விட்டு மாதம் ரூ.75 ஆயிரமும் சம்பாதித்து வருகிறார் என்றும், மனுதாரர் பெற்று வரும் ரூ.1000/-ஐ வைத்துக்கொண்டு தற்போதுள்ள விலை வாசிக்கு மேற்படி பணம் போதுமானதாக இல்லை என்றும், மனுதாரர் தற்போது திருச்சி அரசு சட்டக் கல்லூரியில் இளநிலை சட்டம் பயின்று வருவதாகவும், மனுதாரருக்கு கல்வி கட்டணம், விடுதி கட்டணம், படிப்பதற்கான புத்தமகம், போக்குவரத்து செலவுகள், உணவு, உடை, மருத்துவ செலவினங்களுக்கு மேற்படி பணம் போதுமானதாக இல்லை என்றும், மனுதாரருக்கு மாதம் ரூ.25 ஆயிரத்திற்கு மேல் படிப்பு, உணவு, உடை, மருத்துவ செலவினங்கள் மற்றும் இதர செலவினங்களுக்காக செலவாகிறது என்றும், மனுதாரரது தாயார் மிகவும் கஷ்டப்பட்டும், தெரிந்தவர்கள், உறவினர்கள் உதவியின் மூலம் மேற்கண்ட தேவைகளை சரிவர பூர்த்தி செய்ய் முடியாமல் சிரமப்பட்டு வருவதாகவும், எதிர் மனுதாரர் போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும், ஜீவனாம்ச தொகையை அதிகப்படுத்தி தராமல் மறுத்து வருகிறார் என்றும், அதனால் எதிர் மனுதாரர் செலுத்தி வரும் ஜீவனாம்ச தொகை மாதம் ரூ.1000/- என்பதை தற்போதுள்ள விலைவாசிக்கு ஏற்றாற்போல் மனுதாரரின் உணவு, உடை, மருத்துவம் மற்றும் இளநிலை பட்டப்படிப்பிற்கான செலவினங்களுக்காக மாதாமாதம் ரூ.25,000/-மாக இம்மனு தாக்கல் செய்யும் தேதி முதல் உயர்த்தி வழங்கிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிருரையின் சுருக்கம் :</u>**

2) மனுதார் சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஜுவனாம்ச எதிர்மனுதாரரால் தொகை மனுவில் கண்டுள்ள விசயங்கள் யாவும் இந்த மறுக்கப்படுகிறது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட விசயங்கள் யாவும் பொய்யானவை, கற்பனையான குற்றச்சாட்டுகள் கொண்டு ஜோடிக்கப்பட்ட மனு என்றும், மனுதார் மற்றும் மனுதாரருக்காக அவரது தாயார் சுதா என்பவரால் தாக்கல் செய்யப்படும் மனுக்களிலும் அபிடவிட்டுகளிலும், பிராதிலும் மனுதாரர் வேறு வேறு முகவரிகளை கொடுப்பது வாடிக்கையாகும் என்றும், மனுதாரரது தாயார் சுதா மைனர் மகள் மனுதாரர் கிருத்திகாவிற்காக ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் MC 1/2009 வருடம் தாக்கல் செய்த ஜிவனாம்ச மனுவில் எதிர்மனுதாரர் மனுதாரரை 2001 வருடம் அடித்து துரத்திவிட்டார் என்றும், அதன்பிறகு 04.01.2002 வருடம் எதிர்மனுதார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பேரில் அழகிரிபாளையத்தில் குடி இருந்ததாகவும் சிலமாதங்களிலே எதிர்மனுதார் அவரை அடித்து அழகிரிபாளையத்தில் இருந்து துரத்திவிட்டதால் சுதா தனது தாய் தந்தைவுடனே சுத்தமல்லி சென்று விட்டதாக கூறியுள்ளார் என்றும், அரியலூர் மாவட்ட முன்சிப் கோர்ட்டில் மனுதாரரின் தாய் சுதா தாக்கல் செய்த ஜிவணாம்ச வழக்கு எண் O.S.No 270/2011 தானும் தனது மைனர் மகள் ஆன கிருத்திகாவும் உடையார்பாளையம் வட்டம் சுத்தமல்லி கிராமத்தில் வசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் கிருத்திகா பெரம்பலூர் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிமன்றத்தில் எதிர்மனுதார் ராஜோக்கியம் மற்றும் அவர்கள் மகள்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை வழக்கில் OS. No 38/2022ல் தனது இருப்பு முகவரி மீண்டும் அழகிரிபாளையம் என்று குறிப்பிட்டுள்ளார். பெரம்பலூர் காலம் நிலையத்திலும், குன்னம் காவல் நிலையத்திலும், அரியலூர் காவல் நிலையத்திலும் எதிர்மனுதாரர் மீது கொடுக்கப்படும் புகார் மனுக்களில் தங்களது காவல் நிலையத்திலும், அரியலூர் முகவரி அழகிரிபாளையம் பெரம்பலூர் மாவட்டம் என கொடுத்துள்ளார். மனுதாரருக்கு தனது முகவரி என்ன என்பதை குறிப்பிடுவதிலே இவ்வளவு குழப்பம் உள்ளவராக உள்ளார் என்றும், நீதிமன்றத்திற்கு சுத்தமான கைகளுடன் இவர் வரவில்லை (The Petitioner has not Come forward to this Honorable court with Clean Hands) என்றும், எதிர் மனுதார் அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் பணிபுரிந்து 15.02.2015 ஆண்டு ஓய்வு பெற்று விட்டதாகவும், அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து எதிர்மனதாரருக்கு மாத ஓய்வூதியமாக

ரூ.2396/ மட்டும் தான் பெற்று வருகிறார் என்றும், எதிர்மனுதாரருக்கு சொந்தமாக வீடுகள் எதுவும் கிடையாது தனது முதல் மனைவி பெயரில் உள்ள வீட்டில் தான் முதல் மனைவியுடன் குடி இருந்து கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், இந்த மனுதாரரின் பொய்யான குற்றசாட்டுகளின் அடிப்படையில் எதிர்மனுதாரர் மீது கொடுக்கப்படும் வழக்குகளால் மிகுந்த அலைச்சலுக்கு உள்ளாக்கப்படுவதுடன் மன உளைச்சலுக்கு ஆளாகியும் வீண்பண விவயத்தையும் மனுதாரர் ஏற்படுத்தி வருகிறார் என்றும், மேலும் எதிர்மனுதாரர் மகள்களுக்கு எதிராகவும் வழக்குகளை வேண்டுமென்ற திட்டமிட்டு மனுதாரர் எந்த வித பரிகாரமும் கிடைக்காது என்பதை தெரிந்தும் பழிவாங்கும் நோக்கத்துடன் எதிர்மனுதாரரின் மகள்கள் மீது OS. No 38/2022 வழக்கு போட்டு அதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் பிரச்சனையை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கையையும் அழிக்க துடிக்கிறார் என்றும், மனுதார் சட்டப்படிப்பு இளங்கலை படித்து முடித்தவர் அவரால் தன்னையும் பராமரித்துக்கொண்டு, தனது தாயையும் பராமரித்துக் கொள்ளவும் முடியும் என்றும், மேலும் மனுதாரர் மேஜர் ஆகிவிட்டபடியாகவும் சுயமாக வாழமுடியும் வழக்கறிஞர் தொழில் மூலம் வருமானம் ஈட்டமுடியும் என்பதால் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்ச கோர தகுதியில்லை என்றும், எதிர்மனுதாரர் தனது சொந்த மாத ஓய்வூதியம் 2396/-ல் மாதம் ரூ.1000/-த்தை தவராமல் மனுதாரருக்கு நாளது தேதி வரை தொடர்ந்து செலுத்தி கொண்டு வருகிறார் என்றும், எதிர்மனதாரர் அவரது மருத்துவ செலவு மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கே மற்றவரை சார்ந்து வரவு வேண்டி உள்ளது. மனுதாரரின் குரோத செயல்களால் எதிர்மனுதாரரின் முதல் மனைவி மற்றும் மகள்களும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி மனவேதனைக்கு ஆளாகி உள்ளார் என்றும், மனுதாரர் அவரது தாயாரின் தூர் போதனையின் பேரில் எதிர்மனுதாரரை பலவகைகளிலும் பழிவாங்கும் எண்ணத்துடன் வழக்குகளை போட்டு மிரட்டி வருகிறார் எதிர்மனுதாரரின் உறவினர்களிடம் அவனை நிம்மதியாக வாழ விட மாட்டேன் அதற்காக தான் தன் மனுதாரரை வக்கிலுக்கு படிக்க வைத்துள்ளேன் என்று வெளிப்படையாக வன்மத்துடன் பேசி வருகிறார் என்றும், எதிர் மனுதாரரிடமிருந்து பணம் பறிப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. எதிர் மனுதாரர் பெயரில் சோற்பள நிலமே சொந்தமாக உள்ளதாகவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளதை போல 20 ஏக்கர் நிலமோ அல்லது அந்த நிலத்தில் பயிர் செய்து வருடம் 20 லட்சமோ வருமானம் வருவதாக சொல்லியிருப்பது வடிகட்டிய பொய்யாகும் என்றும், வீடுகள்

வாடகைக்கு விட்டு அதன் மூலம் மாதம் ரூ.20,000/– வருமானம் கிடைப்பதாக சொல்லியிருப்பதையும் எதிர்மனுதாரர் கையில் ரொக்கமாக ரூ.25 லட்சம் வைத்துக்கொண்டு வட்டிக்கு விட்டு மாதம் ரூ.75,000/– சம்பாதித்து வருவதாக கூறுவதையும் மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மேலும் இந்த விசயங்களை மனுதாரர் பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குகளில் தெரிவிக்கவில்லை என்றும், மனுதாரர் மேஜர் ஆகிவிட்டபடியாலும் சுயமாக சம்பாதிக்க கூடிய திறமை உள்ள போதும் வேண்டுமென்ற சட்டப்படியாக தமக்கு எந்த பரிகாரமும் கிடைக்காது என்பது ஒரு இளநிலை சட்டம் படித்த மனுதாரருக்கு நன்கு தெரிந்தும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனதாரர் தாக்கல் செய்துள்ள சட்ட பிரிவுகளின் படி மனுதாரருக்கு எந்த ஒரு பரிகாரமும் கிடைக்காது என்றும், எனவே, எதிர் மனுதாரர் சொந்த வருமானமாக மாத ஓய்வூதியம் ரூ.2396/– பெற்று வரும்போதும் மனுதாரருக்கு ரூ.1000 கொடுத்து வருவதை இதுநாள் வரை நிறுத்தவில்லை என்றும், மனுதாரர் சுயமாக உழைத்து தன்னை பராமரித்துக்கொண்டு அவரது தாயாரையும் பராமரித்து கொள்ளும் திறமை உள்ளவர் என்றும், மனுதாரர் வேண்டுமென்றே ஒவ்வொரு வழக்கு விபரங்களையும் மற்றொரு வழக்கில் சொல்லாமல் மறைத்து வழக்குகளை தாக்கல் செய்து வருகிறார் என்றும், அரியலூர் மாவட்ட முன்சிப் கோர்ட்டில் ஜீவனாம்ச தொகை கேட்டு எதிர்மனுதாரர் மீது தொடரப்பட்ட வழக்கு எண்.OS No.270/2011 ஜீரிஸ்டிக்சன் (Jurisdiction) காரணமாக Return செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் முழுவதும் பொய்யான சங்கதிகளுடன் எதிர் மனுதாரரை பழிவாங்கும் எண்ணத்துடன் தனது தாயோடு சேர்ந்து கொண்டு மாதம் ரூ.25,000/– ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்துள்ள மனுவை எதிர் மனுதாரரின் செலவு தொகையோடு தள்ளுபடி செய்ய பார்த்திருக்கிறார் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:</u>**

3. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு :</u>**

4. மனுதாரர் தரப்பில் மனுதாரர் எதிர் மனுதாரரின் மகள் என்றும், எதிர் மனுதாரருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி இந்நீதிமன்றத்தில் M.C.01/2009 என்ற

வழக்கினை தாக்கல் செய்து அதில் மனுதாரருக்கு எதிர் மனுதாரர் ஜீவனாம்சமாக மாதம் ரூ.1000/— கொடுக்கவேண்டும் என்றும், மேற்படி ஜீவனாம்ச தொகையை மனுதாரரின் திருமண காலம் வரை வழங்கவேண்டும் என்றும் உத்தரவு பகரப்பட்டது என்றும், எதிர் மனுதாரர் மேற்படி உத்தரவின்படி மனுதாரரின் வங்கி கணக்கில் மாதாமாதம் ரூ.1000/— செலுத்தி வருவதாகவும், எதிர் மனுதாரர் அரியலூரில் அரசு சிமெண்ட் கம்பெனியில் சூப்பர் வைசராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று, ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/— பெற்று வருவதாகவும் அவருக்கு சொந்தமாக 20 ஏக்கர் நிலம் உள்ளதாகவும், அவற்றினை பயிர் செய்து வருடத்திற்கு ரூ.20 லட்சமும், அரியலூரில் உள்ள வீட்டை வாடகைக்கு வீட்டு மாதம் ரூ.20 ஆயிரமும் கையிருப்பாக ரூ.25 லட்சத்தை வைத்துக்கொண்டு அதை வட்டிக்கு விட்டு மாதம் ஒன்று ரூ.75 ஆயிரம் சம்பாதித்து வருவதாகவும், மனுதாரர் பெற்று வரும் ரூ.1000/— வைத்துக்கொண்டு தற்போதுள்ள விலை வாசிக்கு மேற்படி பணம் போதுமானதாக இல்லை என்றும், மனுதாரர் திருச்சி அரசு சட்டக்கல்லூரியில் இளநிலை சட்டம் பயின்று வருவதால் அவரது கல்வி கட்டணம், விடுதி கட்டணம், படிப்பதற்கான புத்தகம், போக்குவரத்து செலவு, உணவு, உடை, மருத்துவ செலவினங்களுக்கு மேற்படி தொகை போதுமானதாக இல்லை என்றும், எனவே மனுதாரருக்கு எதிர் மனுதாரர் கொடுத்து வரும் ஜீவனாம்ச தொகையை உயர்த்தி கொடுக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

5. எதிர் மனுதாரர் தரப்பில் எதிர் மனுதாரர் அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் பணிபுரிந்து கடந்த 12.05.2015ம் அண்டு ஓய்வு பெற்றுவிட்டதாகவும், ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.2396/— மட்டும்தான் பெற்று வருவதாகவும், எதிர் மனுதாரருக்கு சொந்தமாக வீடுகள் எதுவும் கிடையாது என்றும், முதல் மனைவி பெயரில் உள்ள வீட்டில் தான் முதல் மனைவியுடன் குடியிருந்து கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், மனுதாரர் இளங்கலை சட்டப்படிப்பு முடித்தவர் என்பதால் அவரால் தன்னை பராமரித்துக்கொள்ள முடியும் என்றும், வழக்கறிஞர் தொழில் மூலம் வருமானம் ஈட்ட முடியும் என்பதால் எதிர் மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் கோர தகுதியில்லை என்றும், எதிர் மனுதாரர் தான் பெற்று வரும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1000/— தவறாமல் மனுதாரருக்கு செலுத்தி வருகிறார் என்றும், எதிர் மனுதாரர் தன்னுடைய மருத்துவ செலவு மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கே மற்றவரை சார்ந்து வாழ வேண்டியுள்ளதாகவும், எதிர் மனுதாரர் பெயரில் சொற்ப நிலமே சொந்தமாக

உள்ளதாகவும், எதிர் மனுதாரரை பழி வாங்கும் நோக்கத்தோடு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7. மனுதாரருக்கு எதிர் மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.1000/–ஐ ஜீவனாம்சமாக கொடுக்கவேண்டும் என்றும், மேற்படி தொகையை மனுதாரருக்கு திருமணமாகும் வரை எதிர் மனுதாரர் கொடுக்க வேண்டும் என்று MC.01/2009 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் கடந்த 18.04.2011 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் நகல் ம.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் இளநிலை சட்டம் பயின்று வருவதாகவும், தனது படிப்பு மற்றும் இதர செலவுகளுக்கு மேற்படி தொகை போதுமானதாக இல்லை என்றும் அதனால் ஜீவனாம்ச தொகையை எதிர் மனுதாரர் உயர்த்தி தரவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர் மனுதாரர் தரப்பில் எதிர் மனுதாரர் ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.2396/– மட்டுமே பெற்று வருவதாகவும் ஜீவனாம்ச தொகையை உயர்த்தி தருவதற்கு போதுமான பொருளாதார வசதியில்லை என்றும் எதிர் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எதிர் மனுதாரருக்கு 3.50 ஏக்கர் நிலம் உள்ளது என்பது ம.த.சா.ஆ.3 ன் மூலம் தெரிய வருகிறது. மனுதாரர் எதிர் மனுதாரருக்கு எதிராக மாண்புமிகு அரியலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.270/2011 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட எதிர் மனுதாரரின் குறுக்கு விசாரணை சாட்சியம் ம.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியத்தினை பரிசீலனை செய்கையில் எதிர் மனுதாரர் தனக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதாகவும், அந்த சொத்துக்களை பயிர் செய்வதன் மூலம் வருடத்திற்கு சுமார் 1 முதல் 1 1/4 இலட்சம் வருமானம் ஈட்டி வருவதாகவும், அரியலூர் பெரியார் நகரில் தனக்கு 3 வீடுகள் உள்ளதாகவும், அந்த 3 வீடுகளையும் மாத வாடகைக்கு விட்டுள்ளதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

8. நமது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் P.Natarajan And Others Vs. M.Sidhanandam and others (S.A.No.550 of 2002) என்ற வழக்கில் தரப்பினர்களால் வழக்கில் ஒப்புக்கொண்டு சொல்லப்பட்ட வாக்குமூலத்தை வேறு ஒரு வழக்கில் பயன்படுத்தலாம் என்றும், அவ்வாறு தான் வாக்குமூலம் கொடுத்ததற்கான காரணத்தை

விளக்குவதற்கு அந்த தரப்பினருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டு அந்த வாக்குமூலமானது நீதிமன்றத்தால் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் மொழிந்துரைக்கப்பட்டுள்ளது. அந்த வாக்குமூலம் குறித்து எதிர் மனுதாரர் தரப்பில் எந்த ஆட்சேபனையும் செய்யப்படவில்லை. அந்த வாக்குமூலம் கொடுக்கப்பட்ட சூழ்நிலையும் எதிரி மனுதாரரால் விளக்கப்படவில்லை. எனவே, மேற்படி ம.த.சா.ஆ.7 ஆவணமானது ஏற்றுக்கொள்ளகூடிய ஆவணம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிர் மனுதாரர் போதிய பொருளாதார தகுநிலை கொண்டுள்ளார் என்பது தெரிய வருகிறது.

9. மனுதாரரின் படிப்பை கருத்திற்கொண்டும், தற்போதுள்ள விலைவாசி உயர்வினை கருத்திற்கொண்டும் பார்க்கும்போது எதிர் மனுதாரர் மனுதாருக்கு கொடுக்கும் ஜீவனாம்ச தொகை குறைவானது என்றும் அதனால் அந்த ஜீவனாம்ச தொகை தற்போதுள்ள விலைவாசிக்கு ஏற்றாற்போல் உயர்த்தி வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிர் மனுதாரர் மனுதாரருக்கு கொடுத்து வரும் ஜீவனாம்ச தொகை ரூ.1000/-ஐ மாற்றி ரூ.5000/-ஆக வழங்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. இறுதியாக மனுதாரருக்கு உணவு, உடை, இருப்பிடம் மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/-ஐ ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு மாதமும் மேற்படி ஜீவனாம்ச தொகையினை பிரதிமாதம் 5ம் தேதிக்குள் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மனுதாரரின் வங்கிக் கணக்கு மூலமாகவோ, நேரிலோ மனுதாரருக்கு திருமணமாகும் வரை செலுத்தவேண்டும் என்றும், மேற்படி இந்த மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தற்பொழுது வரை உள்ள நிலுவை தொகையினை எதிர் மனுதாரர் மனுதாரருக்கு 3 மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு, 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/- ப.கனிமொழி)
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

<u>அட்டவணை</u> :–

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–

ம.சா.1 – கிருத்திகா

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :–

ம.த.சா.ஆ.1 – 26.07.2023 ம் தேதி எதிர்மனுதாரர் பணிபுரிந்த தமிழ்நாடு சிமெண்ட் கழக நிறுவனத்தின் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி மனு கொடுத்ததற்கு மனுதாரருக்கு வழங்கிய பதில் கடிதம் அசல்.

ம.த.சா.ஆ.2 – 30.09.2022 ம் தேதி எதிர்மனுதாரர் மனைவியின் பேரில் உள்ள நிலத்திற்கான பட்டா கணினி நகல்.

ம.த.சா.ஆ.3 – 15.06.2023 ம் தேதி எதிர்மனுதாரர் பேரில் உள்ள நிலத்திற்கான பட்டா கணினி நகல்.

ம.த.சா.ஆ.4 – 06.07.2023 ம் தேதி எதிர் மனுதாரரின் முதல்தார மகள் இலக்கியாவின் திருமண பத்திரிக்கை அசல்

ம.த.சா.ஆ.5 – மனுதாரர் எதிர்மனுதாரர் மற்றும் அவரது வாரிசுக்கு எதிராக மாண்புமிகு பெரம்பலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த O.S.38/2022 ன் பிராது நகல்.

ம.த.சா.ஆ.6 – 18.04.2011 ம் தேதி ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் MC 01/2009 ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல்

ம.த.சா.ஆ.7 – 27.02.2024 மாண்புமிகு அரியலூர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்ற அசல் வழக்கு எண்.270/2011 ல் எதிர் மனுதாரர் அளித்த சாட்சிய வாக்குமூலம் சான்றிட்ட நகல்

<u>மனுதாரர் தரப்பு சான்று பொருட்கள்</u> :– இல்லை

**<u>எதிர் மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:– இல்லை</u>**

**<u>குறிப்பு–</u>**

**எதிர்மனுதாரருக்கு தீர்ப்புரை நகல் வழங்கப்பட்டது.**

(ஒம்/– ப.கனிமொழி)

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,

ஜெயங்கொண்டம்.